## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகையை ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தியும் இத்தொகையை பெறுவத்ற்கு ஏதுவாக இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்புத் தொகையை ரூ.72,000/– ஆக உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு 2)துறை**

**அரசாணை (நிலை) எண்:105**

**நாள் :19.10.2020**
**சார்வரி, ஐப்பசி –3 ஆம் நாள்,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.144, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை, நாள்.06.08.1999
2. அரசாணை (நிலை) எண்.92, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை, நாள். 27.07.2010.
3. அரசாணை (நிலை) எண்.71, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை, நாள்.12.07.2012.
4. ஆதிதிராவிடர் நல இயக்குநர் கடித எண்.ஆ1/9519/2016, நாள்.27.02.2017, 29.06.2018.
5. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு நாள் 2019–2020
6. ஆதிதிராவிடர் நல ஆணையர் கடிதம் ந. க. எண். ஆ1 /10300/2019 நாள். 20.04.2020.

---

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/– உதவித்தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், 2010–2011–ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் உதவித்தொகையை ரூ.500/–ல் இருந்து ரூ.2500/– ஆக உயர்த்தியும் இச்செலவினத்திற்கு தேவையான கூடுதல் தொகை ரூ.2,00,00,000/– க்கு (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

(த.பி.பா)

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013–ம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் மானியத்தொகை ரூ.2,500/–ஐ பெறுவதற்கான இறந்தவரின் குடும்ப வருமான வரம்பு, கிராமப்புறங்களில் ரூ.40,000/– எனவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/– எனவும் நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்படும் உதவித்தொகையினை ரூ.2,500/–லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி ஆணை வழங்க ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியிருந்தார்.

5. ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு ஈமச் சடங்கிற்காக வழங்கப்படும் உதவித்தொகையான ரூ.2500/–ஐ ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என 2019–2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

6. மேலே ஆறில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேலே பத்தி ஐந்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களில் எவரேனும் இறந்தால், இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.2500/– வீதம் கடந்த பத்து ஆண்டுகளாக ஈமச்சடங்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்போதுள்ள விலைவாசி உயர்வின் காரணமாக ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு வழங்கப்படும் உதவித்தொகையினை உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் சுமார் 19,900 ஏழை, எளிய மக்கள் ஆண்டுதோறும் பயனடைந்து வருகின்றனர் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்பிற்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு உதவித் தொகையினை ரூ.2500/– ரூபாயிலிருந்து ரூ.5000/–ரூபாயாக உயர்த்தலாம் என்றும், ஏற்கனவே உள்ள நடைமுறைகளின்படி ஈமச்சடங்கிற்கு உதவித்தொகையினை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், பேரூராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் 10 மாநகராட்சி ஆணையர்களுக்கும் பிரித்து வழங்கி 2020–2021 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்திட ஆணையிடுமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

7. மேலே பத்தி ஐந்தில் உள்ள அறிவிப்பின் அடிப்படையில், ஆதிதிராவிடர் நல ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் (ம) கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட இனத்தவர்களின் ஈமச்சடங்கிற்கு வழங்கப்படும் தொகையினை ரூ.2500/–லிருந்து ரூ.5000/–ஆக உயர்த்தியும், மேற்படி உயர்த்தியதால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.4,97,50,000/–க்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் இந்நிதியுதவியை பெறுவதற்கான வருமான வரம்பினை கிராமப்புறங்களில் ரூ.40,000/– எனவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/– எனவும் நிர்ணயிக்கப்பட்டதை உயர்த்தி ரூ.72,000/–ஆக நிர்ணயம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் –01 ஆதிதிராவிடர் நலன்–800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – BI ஈமச்சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல் – 309 உதவித்தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை IFHRMS (த.தொ.கு.2225 01 800 BI 30903)

பழைய த.தொ.கு.2225 01 800 BI 0930

9. மேலே பத்தி 7ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.4,97,50,000/– 2020–2021 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 7–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 7–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2020–2021 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (ஆ.தி(ம)ப.ந/வ.செ.பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.35819, நிதி (ஆதி(ம)பந) துறை, நாள்.15.10.2020 மற்றும் கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.711 (ஏழு நூற்று பதினொன்று) உடனும் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை–05.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–05.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.

<u>நகல்</u>

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–09
நிதி (ச.ந /வ.செ.பொது.I) /ஆதி(ம)பந / வ.செ.பொது.II) துறை, சென்னை–09.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கூடுதல் தலைமைச்செயலாளரின் முதன்மைச் தனிச்செயலாளர், சென்னை–09.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5) துறை, சென்னை–09.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20/10/2020
பிரிவு அலுவலர்.